முருகப்பெருமான் துணை

**மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.05.2022, புதன்கிழமை

1. தவமாக தரணி காத்தருள
தண்டாயுதன் சக்தியாக வந்த
அவதார ஞானியே அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
குறையிலா லாப திகதி புந்தி வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 11 ம் நாள், 25.05.2022 புதன்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு புலிப்பாணிச்சித்தர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயர்வான சன்மார்க்க வழிதனை
ஞானமாக அரங்கன் அருளிவர
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே சமூக மாற்றமாக
வள்ளல் தன்மை நிறைந்ததாக
முருகப்பெருமான் ஆசி கொண்ட
முழுமை ஞானம் கொண்ட பூமியாக மாறும்
5. மாறுதலை தரும் மார்க்கமாக
மக்களை காக்கும் சக்தியாக
ஆறுமுக அரங்கன் தருமமும்
ஆற்றலாக தீட்சையும் மக்களுக்கு
6. மக்களுக்கு துணையாக வர
மகத்துவமும் நல்ல மாற்றமும்
தேக்கமின்றி வளர்ச்சி நிலையும்
தெய்வ பலமுமாக வந்தடையும்
7. அடையவே யோக ஞான சக்தி
ஆற்றல் தரும் தருமசக்தி
தடையற பலமாகப் பெருகி
தரணியே பாதுகாப்புப் பெறும்
8. காப்புதந்து வழிநடத்தி வரும்
கந்தவேலன் சக்தியான தேசிகனை
ஒப்புகொண்டால் போதும் உலகில்
உயர்வான நிலை மக்களுக்குக் கிட்டும்
9. கிட்டும் உயிர் பாதுகாப்பு
குறையிலா தேகமன பலமுடன்
கட்டமில்லா நிலைகள் நிரம்பி
கலியினில் எல்லா நன்மைகளும் கூடும்

10. கூடவே தலைமை ஞானவழியில்
குவலயம் கண்டுமே சிறக்க
நாடெங்கும் சரவண சோதி வழிபாடும்
ஞானிகள் பூசையும் தொடரவே

11. தொடரவே எங்கும் ஞானவான்கள்
தேற்றம் உருவாகி இனிதே
இடரில்லா ஞான ஆட்சி மலரும்
இயம்பிய அருளாசி முற்றும் முற்றே

–சுபம்–